நல வாரியங்கள் – அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களின் நலத் திட்டங்கள் தொழிலாளர்களை விரைவாக சென்றடைவதைக் கண்காணிக்க உருவாக்கப்பட்ட மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழுக்கள் – திருத்தியமைத்தல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஐ1)த் துறை

அரசாணை (டி) எண். 149

நாள்: 21 .09.2015.
மன்மத, புரட்டாசி – 4,
திருவள்ளுவர் ஆண்டு, 2046.

படிக்க:-

1. அரசாணை (டி) எண்.414, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஐ1) துறை, நாள் 01.06.2007.
2. அரசாணை (டி) எண்.199, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஐ1) துறை, நாள் 21.05.2012.
3. தொழிலாளர் ஆணையரின் கடிதம் எண்.W4/28611/2015, நாள்.16.07.2015.

---------

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தொழிலாளர் துறையின் கீழ் இயங்கும் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்துள்ள உடலுழைப்புத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது வாரிசுகளுக்கு வழங்கப்படும் நலத் திட்டங்கள் தொழிலாளர்களை விரைந்து சென்றடைய, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் அரசு அலுவலர்கள், தொழிலாளர் பிரதிநிதிகள் மற்றும் வேலையளிப்போர் பிரதிநிதிகளை உறுப்பினர்களாக கொண்ட கண்காணிப்பு குழுவினை நியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அரசு பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகத்தரப்பு பிரதிநிதிகளாக முறையே 7 பிரதிநிதிகளும், தொழிற் சங்கத் தரப்பில் 5 பிரதிநிதிகளும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டு, மாவட்ட கண்காணிப்புக் குழு திருத்தியமைக்கப்பட்டது. மேலும், திருத்தியமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவின் அலுவல்சாரா உறுப்பினர்களின் பதவிக்காலத்தினை மூன்று ஆண்டுகளாக நிர்ணயம் செய்தும் ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தொழிலாளர் ஆணையர் அரசுக்குப் பரிந்துரைத்த கருத்துருவினை கவனமுடன் பரிசீலித்து அரசு அதனை ஏற்றுக் கொண்டுள்ளது. அதன்படி, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை மூலம் உருவாக்கப்பட்டு, மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணை மூலம் திருத்தியமைக்கப்பட்ட மாவட்ட கண்காணிப்புக்

குழுவானது கீழ்க்காணும் வகையில் தற்போது திருத்தியமைக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்படுகிறது:–

<u>அரசு பிரதிநிதிகள் (7 நபர்கள்)</u>

| | | |
|---|---|---|
| 1. தலைவர் | – | மாவட்ட ஆட்சித் தலைவர் |
| 2. தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) | – | உறுப்பினர்–செயலர் |
| 3. திட்ட அலுவலர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | – | உறுப்பினர் |
| 4. மாவட்ட வருவாய் அலுவலர் | – | உறுப்பினர் |
| 5. தொழிலாளர் இணை ஆணையர்/ தொழிலாளர் துணை ஆணையர் | – | உறுப்பினர் |
| 6. துணை இயக்குநர், கட்டட மற்றும் கட்டுமான பணி (தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் ) | – | உறுப்பினர் |
| 7. மாவட்ட சமூக நல அலுவலர் | – | உறுப்பினர் |

<u>நிர்வாகத் தரப்பு பிரதிநிதிகள் (7 நபர்கள்)</u>

| | | |
|---|---|---|
| 1. சேம்பர் ஆஃப் காமர்ஸ் | – | உறுப்பினர் |
| 2. ஒட்டல் உரிமையாளர் சங்கம் | – | உறுப்பினர் |
| 3. ஐந்து இதர பெரிய தொழில்களின் நிர்வாகத் தரப்பினர் | – | உறுப்பினர் |

<u>தொழிற்சங்கப் பிரதிநிதிகள்</u>

1. அண்ணா தொழிற்சங்கப் பேரவை (ATP)
2. இந்திய தொழிற்சங்கங்களின் மத்திய அமைப்பு (CITU)
3. அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (AITUC)
4. இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் (INTUC),
5. அனைத்திந்திய மத்திய தொழிற்சங்க மையம் (A.I.C.C.T.U)
6. பாரதிய மஸ்தூர் சங்கம் (B.M.S)
7. இந்திய குடியரசு கட்சி

4. இக்கண்காணிப்புக் குழுவானது மாதம் ஒரு முறை கூடி கீழ்க்கண்ட நேர்வுகள் குறித்து விவாதிக்கும்.

(i) 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நலச்சட்டத்தின்படி பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களை இனம் காணுதல் மற்றும் புள்ளி விவரம் பராமரித்தல்.

(ii) தற்போது புலம் பெயர்ந்த கட்டுமானத் தொழிலாளர்களை (Migrant Construction Workers) இனம் காணுதல் மற்றும் வாரியத்தில் பதிவு செய்தல்.

(iii) உரிய தொழில் புரியும் தொழிலாளர்களை மட்டும் பதிவு செய்தல்.

(iv)தொழிலாளர்களின் பணி விவர சரிபார்ப்பிற்காக கிராம நிர்வாக அலுவலர்களுக்கு/வருவாய் ஆய்வாளர்களுக்கு (சென்னையில்) அனுப்பப்படும் விண்ணப்பங்களை 15 தினங்களுக்குள் சரிபார்த்து மீள தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்)க்கு அனுப்புவதை உறுதி செய்தல்.

(v) உரிய காலத்திற்குள் தொழிலாளர்களை பதிவு செய்து அடையாள அட்டை வழங்குதல்.

(vi) பதிவு பெற்ற தொழிலாளர்களின் கேட்பு மனுக்களில் உள்ள விவரங்களை சரிபார்த்தல்.

(vii) தொழிலாளரின் கேட்பு மனுக்களில் உள்ள விவரங்கள் குறித்து தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ஆய்வு செய்து நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் விண்ணப்பங்களின் மீது உரிய நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்தல்.

(viii) தொழிலாளர் அலுவலரிடம் (சமூக பாதுகாப்புத் திட்டம்) போதுமான அளவு அடையாள அட்டை இருப்பு குறித்து உறுதி செய்தல்.

(ix) வாரியச் செயல்பாடுகளின் முன்னேற்றம் குறித்தும், விரைந்து உதவித்தொகை வழங்குவது குறித்தும் ஆலோசனை வழங்குதல்.

(x) தொழிலாளர்களின் தொழில் சம்மந்தப்பட்ட நலத்திட்ட உதவிகள் குறித்து ஆலோசனை வழங்குதல்.

(xi) பதிவு பெற்ற தொழிற்சங்கங்கள் / தொழிலாளர்களிடம் கலந்தாய்வு செய்து அவர்களுக்கு கிடைக்கப்பெறும் உதவித்தொகைகள் குறித்து விவரம் அறிதல்.

(xii) ஒரு தொழிலாளி அரசின் இரு வேறு திட்டங்களில் பயன்களை ஒரு நிகழ்விற்கு பெறுவதை தடுக்கும் வகையில் சமூக நலத்துறை, வருவாய்த்துறை ஆகிய துறைகளில் உரிய சான்றினை தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) கோரும் நேர்வில் தொடர்புடைய துறைகள் உரிய காலத்தில் சான்றினை அனுப்புவதை உறுதி செய்தல்.

(xiii) குழு தீர்மானிக்கும் இதர பிற நடவடிக்கைகள்.

5. மேலே பத்தி 3—ல் கண்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவின் அலுவல்சாரா உறுப்பினர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகள் என நிர்ணயம் செய்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்,
அரசு செயலாளர்.

பெறுநர்

தொழிலாளர்ஆணையர், சென்னை—600 006.
இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், சென்னை -14.
வருவாய் நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை—600 005.
ஆணையர், ஊரக வளர்ச்சித்துறை, பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை—600 015 .
ஆணையர், சமூகநலத்துறை, சிந்தாதிரிபேட்டை, சென்னை— 600 002.
இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள், சென்னை—600 006.
செயலாளர்,தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம்,அண்ணாநகர் (கிழக்கு) சென்னை—600 102.
செயலாளர், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம்,
சென்னை—600 034.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்)

நகல்
வருவாய்த்துறை, சென்னை—600 009.
ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை, சென்னை—600 009.
சமூகநலம் மற்றும் சத்துணவு துறை, சென்னை—600 009.
மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர்நல அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை—600 009.
செயலாளரின் தனிச் செயலர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை,
சென்னை—600 009.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

22/9/15
பிரிவு அலுவலர்.

22/9/15

5/6